செ.வெ.எண் : 19 / ஆகஸ்ட் நாள் : 08.08.2017

# இராமநாதபுரம் மாவட்ட பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் மேட்டூர் அணையிலிருந்து 7000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விட

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K பழனிசாமி அவர்கள்,

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்களின் கோரிக்கையின்படி உத்தரவு

இராமநாதபுரம் மாவட்டம் நான்கு நகராட்சிகள், ஏழு பேரூராட்சிகள் மற்றும் 429 ஊராட்சிகளுடன் 11 ஊராட்சி ஒன்றியங்களை கொண்ட பெரிய மாவட்டம் ஆகும். இந்த மாவட்டத்தின் பெரும்பகுதி கிராமங்கள் கடற்கரை பகுதியை சார்ந்துள்ளபடியால் இங்கு கிடைக்கின்ற நிலத்தடி நீர் அதிக உப்புத்தன்மை உடையதாக உள்ளது. இதனால் இந்த மாவட்டத்தின் குடிநீர் தேவைக்கு திருச்சி காவிரி ஆற்றுப்படுகையிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீரையே பிரதானமாக சார்ந்திருக்க வேண்டிய சூழல் உள்ளது. மேலும் ஒருசில பகுதிகளில் கிடைத்த உள்ளூர் குடிநீர் ஆதாரங்களும் தற்போதைய வறட்சியின் காரணமாக வறண்டு போய்விட்டன.

எனவே, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் பற்றாக்குறையை சரி செய்வதற்காக மாண்புமிகு தமிழக தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மாவட்டத்தில் உள்ள நகர் மற்றும் ஊரக பகுதிகளின் குடிநீர் தேவைக்காக ரூபாய் 18.47 கோடி மதிப்பில் 1340 பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் நிர்வாக அனுமதி வழங்கி பணிகளை செயல்படுத்தியுள்ளது. இருப்பினும் தொடர் வறட்சியின் காரணமாக மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய இயலவில்லை.

தொடர் வறட்சியின் காரணமாக காவேரி ஆற்றுப்படுகையிலும் கிடைத்த நிலத்தடி நீர் மட்டம் எதிர்பாராத அளவிற்கு குறைந்துவிட்டபடியால், இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக வழங்கப்பட்டு வந்த 48 MLD அளவானது படிப்படியாக குறைந்து வந்து இன்றைய நாளில் மிகக்குறைவாக 8 MLD மட்டுமே கிடைக்கின்றன. இதைக்கொண்டு எந்த கிராமத்திற்கும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி (OHT) மூலமாக குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மேட்டூர் அணைக்கட்டில் நீர்வரத்து அதிகரித்து வரும் சூழலில் பொதுக்களின் குடிநீர் தேவைக்காக காவிரி ஆற்றில் 3000 கனஅடி வீதம் குடிநீர் திறந்துவிடப்பட்டு திருச்சி - குழித்தளை அருகே வந்து சேர்ந்துள்ளது. இதே கனஅடி அளவில் ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் கிடைக்கின்ற முத்தரசநல்லூர் என்ற இடத்திற்கு வந்துசேர வாய்ப்பு இருக்காது என்பதை உணர்ந்த மாவட்ட நிர்வாகம், இதுதொடர்பான விவரத்தினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றதின் பெயரில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நேரடியாக சந்தித்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் மேட்டூர் அணையிலிருந்து 3000 கனஅடிக்கு பதிலாக 7000 கனஅடிவீதம் திறந்துவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்திடும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

இதற்கான உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், முழுமுயற்சி செய்து அனுமதி பெற்று தந்துள்ள மாண்புமிகு தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றி தெரிவிப்பதாக மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**